### மத்திய அரசுக்கு எதிரான

# நம்பிக்கையில்லா தீர்மானத்தை விவாதத்துக்கு எடுக்க அனுமதி

## மக்களவை தலைவர் அறிவிப்பு

**புதுடெல்லி**

மத்திய அரசுக்கு எதிராக காங்கிரஸ் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதாக மக்களவை தலைவர் ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 20–ம் தேதி தொடங்கியது. மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடந்த 4 நாட்களாக இரு அவைகளும் முடங்கின.

இந்நிலையில், நேற்று காலை மக்களவை கூடியதும், கார்கில் போர் வெற்றி தினத்தை முன்னிட்டு, போரில் உயிர்நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர், கேள்வி நேரம் தொடங்கியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மணிப்பூர் விவகாரத்தை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர். அமளி நீடித்ததால், மக்களவை தலைவர் ஓம் பிர்லா பகல் 12 மணி வரை அவையை ஒத்திவைத்தார்.

பகல் 12 மணிக்கு அவை கூடியபோது, உறுப்பினர்களின் மேஜை மீது மசோதா நகல் உள்ளிட்ட ஆவணங்கள் வைக்கப்பட்டன. அப்போது, நம்பிக்கையில்லா தீர்மான விவகாரத்தை வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர்.

இதையடுத்து, மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர வலியுறுத்தி காங்கிரஸ் உறுப்பினர் கவுரவ் கோகோய் நோட்டீஸ் வழங்கி உள்ளதாக கூறிய ஓம் பிர்லா, இதற்கு யார் யார் ஆதரவு தெரிவிக்கிறீர்கள் என்று கேட்டார். சோனியா காந்தி, பரூக் அப்துல்லா, டி.ஆர்.பாலு, சுப்ரியா சுலே உள்ளிட்ட 'இண்டியா' கூட்டணி கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.

விதிமுறைகளின்படி, 50–க்கும் மேற்பட்டோர் ஆதரவு தெரிவித்ததால், அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதாக ஓம் பிர்லா தெரிவித்தார். அது எப்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று பின்னர் தெரிவிக்கப்படும் என்று கூறினார். இண்டியா கூட்டணியில் இடம்பெறாத பாரத் ராஷ்டிர சமிதி (பி.ஆர்.எஸ்) சார்பில் தனியாக நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் வழங்கப்பட்டது. இதற்கிடையே, கூச்சல், குழப்பம் நிலவியதால் அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. 2 மணிக்கு கூடியபோதும் இதே நிலை நீடித்ததால் மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடையும் என்பது எதிர்க்கட்சிகளுக்கும் தெரியும். மணிப்பூர் விவகாரத்தில் பிரதமரை மக்களவையில் பேச வைக்கவே இத்தீர்மானத்தை கொண்டு வந்துள்ளதாக எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர்.

### தொழிற்சாலைகள், அலுவலகங்களில் பணியாற்றும்

# ஊழியர்களில் 50 சதவீதத்தினருக்கு சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்த பாதிப்பு

## மருத்துவ அமைப்புகள் இணைந்து நடத்திய ஆய்வில் தகவல்

**சென்னை**

தொழிற்சாலைகள், அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களில் 50 சதவீதத்தினருக்கு சர்க்கரை நோய் மற்றும் உயர் ரத்த அழுத்த பாதிப்பு இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

தமிழகம், கேரளம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ஒடிசா ஆகிய மாநிலங்களில் மொத்தம் 11 தொழில் நிறுவனங்களில் மொத்தம் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்களிடம் மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. டாக்டர் மோகன்ஸ் சர்க்கரை நோய் ஆராய்ச்சி மையம், திருவனந்தபுரம் ஸ்ரீ சித்ரா திருநாள் மருத்துவ ஆராய்ச்சி நிலையம், அமெரிக்காவின் ஹாவர்டு மற்றும் எமோரி பல்கலைக்கழகங்கள், இந்திய பொது சுகாதார அறக்கட்டளை (பிஹெச்எஃப்ஐ) ஆகியவை இணைந்து அந்த ஆய்வை நடத்தின. ரத்த சர்க்கரை அளவு, மூன்று மாத சர்க்கரை அளவு (ஹெச்பிஏ1சி), உடல் பருமன், ரத்த அழுத்தப் பரிசோதனைகள் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டன. அந்த பரிசோதனைகள் மருத்துவ வல்லுநர்களால் ஆய்வு செய்யப்பட்டன. அது குறித்த முடிவுகள் சென்னையில் நேற்று வெளியிடப்பட்டன.

அதில், டாக்டர் மோகன்ஸ் சர்க்கரை நோய் மையத்தின் தலைவர் மருத்துவர் வி.மோகன், பிஹெச்எஃப்ஐ அறக்கட்டளை பேராசிரியர் டாக்டர் பிரபாகரன், சித்ரா திருநாள் மருத்துவமனை தொற்றுநோயியல் துறை கூடுதல் பேராசிரியர் ஜுமான் உள்ளிட்டோர் அதில் கலந்து கொண்டனர். அப்போது அவர்கள் கூறியதாவது:

பரிசோதனை முடிவுகளின்படி, மூன்றில் ஒருவருக்கு உயர் ரத்த அழுத்தம் இருப்பது கண்டறியப்பட்டது. அதேபோன்று பாதிக்கும் மேற்பட்டோருக்கு சர்க்கரை நோய்க்கு முந்தைய நிலை அல்லது சர்க்கரை நோய் பாதிப்பு இருப்பதும் உறுதி செய்யப்பட்டது. இவைதவிர அதீத உடல் பருமன், அது சார்ந்த நோய்கள் இருப்பதும் ஆய்வில் தெரிய வந்தது. உடற்பயிற்சியின்மை, வாழ்க்கை முறை மாற்றம், ஆரோக்கியமற்ற உணவு முறை ஆகியவையே அதற்கு காரணம். ஆரம்ப நிலையில் இத்தகைய பாதிப்புகளை கண்டறியும்போது மருத்துவ சிகிச்சைகளையும், வாழ்க்கை முறை மாற்றத்தையும் கடைபிடித்து அதனை கட்டுக்குள் வைக்கலாம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஜி-20 மாநாட்டு சுற்றுச்சூழல் பணிக்குழு கூட்டம்

## மத்திய அரசு செயலர் தொடங்கிவைத்தார்

**சென்னை**

சூழலியல் மீட்டெடுப்பு, பல்லுயிர் பரவல், நீராதாரங்கள் பாதுகாப்பு, நீடித்த கடல்சார் பொருளாதாரம் உள்ளிட்டவை குறித்து விவாதிப்பதற்காக, ஜி-20 மாநாட்டின் முதல் சுற்றுச்சூழல், காலநிலை நிலைத்தன்மை பணிக் குழுக்கூட்டம் கடந்த பிப்ரவரியில் பெங்களூருவிலும், பின்னர் குஜராத் காந்திநகர், மும்பையிலும் நடைபெற்றது.

இந்நிலையில், 4-வது கூட்டம் சென்னை கிண்டியில் நேற்று தொடங்கியது. மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறைச் செயலர் லீனா நந்தன் கூட்டத்தை தொடங்கிவைத்துப் பேசியதாவது:

அனைத்து ஜி-20 நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள், இந்த பணிக் குழுவில் மகத்தான பங்களிப்பு வழங்கியுள்ளனர். காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்த்துப் போராடுவதில், எங்களின் அர்ப்பணிப்புக்கு இது சான்றாகும்.

சென்னைக் கூட்டத்தில் இறுதி முடிவு மேற்கொள்ள இருக்கிறோம். சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும் நாடுகளுக்கு இந்த முடிவுகள் உதவும். இரு நாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், இதுவரை நடத்தப்பட்ட கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு, இறுதிசெய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து விவாதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கூட்டத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுச்சூழல் அமைச்சர்களும் பங்கேற்க உள்ளனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக, அனைத்து நாடுகளின் ஒருமித்த கருத்தை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

### மாமல்லபுரம் புராதன சின்னங்களை

# ஜி-20 மாநாட்டு பிரதிநிதிகள் கண்டு ரசிப்பு

**● மாமல்லபுரம்**

சென்னையில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டு பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர், மாமல்லபுரத்தில் கடற்கரை கோயில் உள்ளிட்ட சிற்பங்களை கண்டு ரசித்தனர்.

ஜி20 நாடுகளின் கூட்டமைப்பின் தலைமை பொறுப்பை இந்தியா ஏற்றதை தொடர்ந்து, பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்குகள் மற்றும் 200-க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன. இதில், சென்னையில் ஜி-20 பேரிடர் அபாயத் தணிப்பு பணிக்குழு மாநாடு கடந்த 24 மற்றும் 25-ம் தேதி என இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இந்த மாநாட்டில், அமெரிக்கா, ரஷ்யா, பிரேசில், அர்ஜென்டினா, ஆஸ்திரேலிய உள்ளிட்ட ஜி20 நாடுகளை சேர்ந்த விருந்தினர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்நிலையில், மேற்கண்ட மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டு பிரதிநிதிகள் நேற்று மாலை 5 மணி முதல் 6 மணி வரை மாமல்லபுரத்தில் உள்ள பல்லவ மன்னர்களின் கலைச் சின்னங்களான கடற்கரை கோயில், ஐந்துரதம், அர்ச்சுனன் தபசு உள்ளிட்ட புராதன சின்னங்களை கண்டு ரசிக்க, சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்திருந்தது.



↑ **சென்னையில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டு பிரதிநிதிகள் மாமல்லபுரம் கடற்கரை கோயிலை கண்டு ரசித்தனர்.**

இதன்பேரில், சென்னையில் இருந்து மாமல்லபுரத்துக்கு சொகுசு பேருந்துகளில் வந்த 120 பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் ஐந்து ரதம், அர்ஜூனன் தபசு பகுதியை சுற்றி பார்த்தனர். மேலும், நிறைவாக கடற்கரை கோயிலை நேரில் கண்டு ரசித்தனர். இதில், சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுற்றுலா வழிகாட்டிகள் புரதான சின்னங்களின் வரலாற்று சிறப்புகளை வெளிநாட்டினருக்கு விரிவாக எடுத்துக் கூறினர். பின்னர், தனியார் நட்சத்திர விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தில் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், ஜி20 மாநாட்டு விருந்தினர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பு பணியில் மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. மேலும், ட்ரோன் கேமராக்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தன. மாவட்ட எஸ்பி சாய் பிரனீத் தலைமையில், 200-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

EVA STALIN IAS



# குறுவைக்குத் திறக்கும் காவிரி நீர் ஏன் வயலுக்கு வருவதில்லை?



தங்க.ஜெயராமன்
பேராசிரியர்
தொடர்புக்கு: profjayaraman@gmail.com

கல்லணையிலிருந்து வங்கக் கடல்வரை காவிரிப் படுகையை நான்கு அங்கணமாக்கினால் திருத்துறைப்பூண்டி மூன்றாவது அங்கணத்தில் இருக்கக்கூடும். அங்கே பரப்பாகரம் கிராமத்தில் தண்ணீர் இல்லாமல் கருகும் தன் குறுவைப் பயிரை ஒரு விவசாயி உழுது அழித்ததாகச் செய்தி ('இந்து தமிழ் திசை', 23.07.23) வெளியாகியுள்ளது.

மேட்டூர் திறந்து நாற்பத்தோரு நாள்களில் ஒருமுறை வயலுக்குத் தண்ணீர் வந்ததாம். ஒரு கிராமத்தில் நடந்ததை நான் பொதுவான பிரச்சினை ஆக்குவதாக நினைக்க வேண்டாம். பரப்பாகரம் போன்ற நேரடி விதைப்புப் பகுதிகளில் தண்ணீர் இல்லாவிட்டால் காலத்தோடு களைக்கொல்லி தெளிக்க முடியாது என்பது பெரும் பிரச்சினை. காவிரி, வெண்ணாறு ஒவ்வொன்றிலும் பத்து நாள்களுக்காவது முறை வைக்காமல் தண்ணீர் விட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைக்கிறார்கள்.

**நிலைத்துவிட்ட சோகம்:** இரண்டு சங்கதிகள் தெளிவாகத் தெரிகின்றன: ஆற்றில் வரும் தண்ணீர் பெரும்பாலும் வயலுக்கு எட்டுவதில்லை. ஆற்றின் வயிறு குழிந்து மிகவும் பள்ளமாகிவிட்டது. இது முதல் சங்கதி. முறைப் பாசன ஏற்பாட்டிலும், விடுவிக்கும் தண்ணீரின் அளவிலும் கறாராக இல்லாமல் நிலைமைக்கும் இடத்துக்கும் ஏற்ப அவற்றில் நெகிழ்ச்சி வர வேண்டும். இது இரண்டாவது சங்கதி. ஆனால், அவ்வப்போது இதற்கான தகவல் சேகரிப்பும் முனைப்பான நிர்வாக ஏற்பாடும் எளிதில் பூர்த்தியாகும் தேவைகள் அல்ல.

ஆற்றில் வரத்து அதிகரிக்கும்போதுதான் வாய்க்காலுக்குத் தண்ணீர் ஏறுகிறது என்றால் சிலருக்குப் புரியாது. வாய்க்கால் மட்டத்துக்கும் ஆறு மட்டத்துக்கும் காலம் காலமாக இருந்த இசைவு கடந்த 40 ஆண்டுகளில் வெகுவாகக் குலைந்துவிட்டது என்று புது மொழியில் சொன்னால் புரியக்கூடும். காவிரிப் படுகையில் இது நிலைத்துவிட்ட சோகம். சில நாட்களுக்கு முன்னர் சுவாமிமலையிலிருந்து ஒரு செய்தி. நாம் முன்பு கூறிய காவிரிப் படுகையின் நான்கு அங்கணங்களில் அந்த ஊர் இரண்டாவது அங்கணத்தில் இருப்பதாகக் கொள்ளலாம். 300 மீட்டர் தொலைவில் உள்ள காவிரியிலிருந்து சுவாமிநாத சுவாமி கோயில் தெப்பக் குளத்துக்குத் தானாகவே வரும் தண்ணீர், ஆறு பள்ளமாகிவிட்டதால் இப்போது வருவதில்லை. குழாய்கள் பதித்து மின் மோட்டாரால் குளத்துக்குத் தண்ணீர் இறைக்கிறார்கள் ('இந்து தமிழ் திசை', 16.07.23). இத்தனைக்கும், வெண்ணாறுபோல் அல்லாமல், காவிரி ஒரு கரை போன்ற மேட்டில் ஓடுவதாகத்தான் புவியியலர்கள் சொல்கிறார்கள்.

**நினைத்துப் பார்க்காத நிலைமை:** சுவாமிமலை குளம் காவிரியிலிருந்து 300 மீட்டர் தள்ளி இருப்பதுபோல் கிராமங்களில் வாய்க்கால் தலைப்பு இருக்காது. வயல்வெளியிலிருந்து வாய்க்கால் தலைப்பு இரண்டு, மூன்று கிமீ. தொலைவில் இருக்கும். அந்த இடத்தில்தான் ஆற்றின் நீர் மட்டம் வாய்க்காலுக்கு எட்டுவதாக அமைந்திருக்கும். இது இயற்கையாக அமைந்தது. இந்தத் தொலைவைக் கடந்து, பின்னர் வயல்வெளியிலேயே இரண்டு, மூன்று கிமீ. கடந்து கிராமத்தின் கடைமடைக்குத் தண்ணீர் எட்ட வேண்டும். முறைப் பாசனத்தில் ஆறு நாள்கள் பாய்வதும் அடுத்த ஆறு நாள்கள் காய்வதுமாக இருந்தால் தண்ணீர் இந்தத் தொலைவை எப்படிக் கடக்கும்? சுவாமிமலையில் செய்வதுபோல் அந்தந்தக் கிராமத்துக்கு மோட்டார் வைத்துத் தண்ணீர் இறைக்க இயலாது. இயலக்கூடிய மாற்று ஏற்பாடாக வாய்க்கால் தலைப்புக்கும் சற்றுக் கீழே சில இடங்களில் படுக்கை அணைகள் உள்ளன. இவை ஆற்றின் நீர் மட்டத்தை உயர்த்தித் தண்ணீரை வாய்க்கால் வாய்க்கு எட்டச் செய்யும்.

இன்றைய நிலைமையில் ஒவ்வொரு கிராமத்தின் வாய்க்கால் தலைப்பிலும் இப்படிப் படுக்கை அணை கட்ட வேண்டியிருக்கலாம். ஆற்றின் நீர் மட்டத்துக்குப் பொருந்தும் இடத்தில் வாய்க்கால் தலைப்பு அமைந்த காலம் கழிந்து, இப்போது அதே இடத்தில் வாய்க்கால் வாய் மட்டத்துக்கு ஆற்றின் நீர் மட்டத்தைச் செயற்கையாக உயர்த்த வேண்டியுள்ளது. ஆக, காவிரியின் கிளைகள் எல்லாமே பள்ளமாகி பாசனத் திறனை வேகமாக இழந்துவருகின்றன.

ஆறுகள் ஏன் பள்ளமாகின்றன என்று ஒரு செய்தியாளர் கேட்டார். பொருளாதார வளர்ச்சி வேகத்தில், கட்டுமானப் பெருக்கத்தின் மணல் தேவையை அவை பூர்த்திசெய்வதால் என்று குறிப்பாகச் சொன்னேன். காவிரிப் படுகை ஆறுகளுக்கும் வளர்ச்சிக்கும் தண்ணீர் மூலம் மறைமுகமாக அல்லாமல், இப்படி ஒரு நேரடித் தொடர்பு உருவாகும் என்று அப்போது நினைத்திருக்கவில்லை.

> இனி நாம் செய்யக்கூடியது காவிரிக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு பற்றிய சிந்தனைக் கலாச்சாரத்தில் மாற்றம்தான். காவிரி ஓடுகால் அல்ல, ஆறு என்பதை மறந்துவிடக் கூடாது!

**பாசனம் எங்கே தொடங்குகிறது?** காவிரிப் படுகையில் எங்கள் கிராமத்தின் பாசனம் எங்கே தொடங்குகிறது? காலனிய ஆட்சிக்கு முன்னால் கேட்டிருந்தால் அது எங்கள் ஊர் வாய்க்கால் தலைப்பில்தான் என்று சொல்லியிருப்பேன். அப்போது ஆற்றில் தண்ணீர் வந்தால், அது தன்னாலேயே வாய்க்காலிலும் வரும். காலனிய ஆட்சிக் காலத்தில் அது கல்லணையில் தொடங்கியது என்று சொல்வது சரியாக இருந்திருக்கும். இப்போது அது மேட்டூரில் தொடங்குகிறது என்பது பொருத்தமாக இருக்கலாம். இல்லை, எங்கள் கிராமத்தின் பாசனம் கர்நாடக அணைகளில் தொடங்குகிறது என்று சொல்வதுகூடப் பொருந்தும் என்பது துயரமே.

நீர்த்தேக்கம் என்று வந்த பிறகு அசலான ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசன மாதிரிக்கு மாறிக்கொண்டது. வரத்து நீரைச் சேமித்து, வேண்டும்போது வேண்டிய அளவுக்கு விடுவிக்கிறோம். மறுகால் பாயும் ஏரி போலவே ஒரு அணையிலிருந்து அடுத்த அணைக்குத் தண்ணீர் வருகிறது. இது வளர்ச்சிப் பண்பாட்டின் அங்கம். ஆறு பள்ளமானது நிரந்தரப் பிரச்சினை என்றால், முறைப்பாசனமும் நீர் விடுவிப்பு அளவும் அதைத் தீவிரப்படுத்துகின்றன. ஆற்று மட்டத்துக்கும், வாய்க்கால் தலைப்புக்கும் முன்பு இருந்த இசைவை இன்று மீட்க இயலாது. காவிரிப் படுகையின் புவியியல் அமைப்பை காவிரியின் இயற்கையான போக்கு தீர்மானித்த காலம் இனி மீளுமா? ஒரு தீர்வாக சாகுபடி முறை, பயிர் வகை, பயிரிடும் பருவம், பாசன முறை என்று தெரிந்த வகைகளில் முயன்று முயற்சியின் எல்லைக்கே வந்துவிட்டோம். இனி நாம் செய்யக்கூடியது காவிரிக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு பற்றிய சிந்தனைக் கலாச்சாரத்தில் மாற்றம்தான். காவிரி ஓடுகால் அல்ல, ஆறு என்பதை மறந்துவிடக் கூடாது. இல்லையா!

# முதியோருக்கு அடைக்கலம்: தமிழ்நாடு அரசின் கடமை!

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் அரசு சார்பில் முதியோர் இல்லங்கள் தொடங்கப்பட வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்கில், மாநில அரசிடம் விளக்கம் கேட்டுள்ளது சென்னை உயர் நீதிமன்றம். அரவணைப்பற்ற, ஆதரவற்ற நிலையில் இருக்கும் முதியோருக்கு நம்பிக்கையளிக்கும் தருணம் இது.

இந்தியச் சமூகத்தில் மரியாதைக்கு உரியவர்களாகக் கருதப்படும் முதியவர்கள், நடைமுறை வாழ்வில் குடும்ப அமைப்பிலும் பொது இடங்களிலும் புறக்கணிப்புகளுக்கும் அவமதிப்புகளுக்கும் குற்றச்செயல்களுக்கும் இலக்காவது தொடர்கிறது. 2021இல் மட்டும், இந்தியாவின் 19 பெருநகரங்களில் முதியோருக்கு எதிராக 4,264 குற்றச்சம்பவங்கள் நிகழ்ந்திருப்பதாக தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் தெரிவிக்கிறது. இந்நிலையில், முதியோருக்குப் பாதுகாப்பான, சுகாதார வசதிகளுடன் கூடிய பராமரிப்பு இல்லங்கள் அவசியம். அதேவேளையில், தனியாரால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் பலவற்றில் பல்வேறு வகையிலான அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள் நடப்பதாக அவ்வப்போது செய்திகள் வெளியாகின்றன. விழுப்புரம் மாவட்டத்தில், முறையான அனுமதி பெறாமல் நடத்தப்பட்டுவந்த அன்பு ஜோதி இல்லத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த முதியோர் உள்ளிட்டோர் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் துன்புறுத்தப்பட்ட சம்பவம் ஓர் உதாரணம்.

இந்தப் பின்னணியில், பெங்களூரு கிறிஸ்து பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டு பயிலும் சட்ட மாணவர் பாஸ்கல் சசி, சாத்தியமுள்ள இடங்களில் முதியோர் இல்லங்களைத் தமிழ்நாடு அரசு தொடங்க உத்தரவிடுமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். மாவட்டத்துக்கு ஒரு முதியோர் இல்லத்தையாவது அரசு அமைக்க வேண்டும் என்றும், ஏழ்மை நிலையில் இருக்கும் 150 முதியோருக்குக் குறைந்தபட்சம் ஓர் இல்லம் எனும் அளவில் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தன் மனுவில் வலியுறுத்தியிருந்தார்.

2007இல் நிறைவேற்றப்பட்ட மூத்த குடிமக்களின் பராமரிப்பு - நலச் சட்டத்தின் பிரிவு 19(1), மாநில அரசுகள் போதுமான எண்ணிக்கையில் முதியோர் இல்லங்களைத் தொடங்கி நடத்த வேண்டும் என்கிறது. ஆனால், தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களில் அது முறையாகச் செயல்படுத்தப்படவில்லை. கடந்த ஆண்டு உத்தராகண்டிலும் இதே போன்ற ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இப்படியான சூழலில், தமிழ்நாடு அரசு இந்தச் சட்டத்தை அமல்படுத்தத் தவறியதால், குறைந்தபட்சம் பாதுகாப்பான இடத்தில் தங்குவதற்கான உரிமையை முதியோர் இழந்து நிற்பதாகத் தனது மனுவில் குறிப்பிட்டிருக்கும் பாஸ்கல், இது தொடர்பான நிர்வாக சட்டவிதிகளை அரசு மீறியிருப்பது மட்டுமல்லாமல், இது தொடர்பாக உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் பிறப்பித்த உத்தரவுகளையும் நிறைவேற்றத் தவறிவிட்டதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

முன்னதாக, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் அவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சமூக நலன் - பெண்கள் அதிகாரமளித்தல் இயக்குநரகம், முதியோர் இல்லங்களை மாநில அரசுகள் நேரடியாக நடத்துவதில்லை என விளக்கம் அளித்திருப்பதும் இந்த வழக்கின் மூலம் தெரியவந்திருக்கிறது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு அடங்கிய அமர்வு, இது தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டிருக்கிறது. வழக்கு ஜூலை 31 அன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது. தேவையற்ற சுமை எனப் பிள்ளைகளாலும் சமூகத்தாலும் கைவிடப்படும் மூத்த குடிமக்களின் கண்ணீர்க் கதைகள் ஏராளம். குடும்பத்தாலும் சமூகத்தாலும் கைவிடப்பட்ட முதியவர்களுக்கு தமிழ்நாடு அரசு - சட்டப்படி - அடைக்கலம் கொடுக்க முன்வர வேண்டும்.